| கொள்கைத் தலைப்பு<br>**Medical Financial Assistance** | கொள்கை எண்<br>**NATL.CB.307** |
|---|---|
| பொறுப்புத் துறை<br>**தேசிய சமூக ஆரோக்கியம்** | தொடங்கும் தேதி<br>**ஜனவரி 1, 2024** |
| ஆவண உரிமையாளர்<br>**இயக்குநர், Medical Financial Assistance** | பக்கம்<br>**1 / 51** |

## 1.0 பாலிசி அறிக்கை

Kaiser Foundation Health Plans (KFHP) மற்றும் Kaiser Foundation Hospitals (KFH) ஆகியவை நோய்வாய்ப்படக்கூடிய மக்கள் எளிதில் பராமரிப்பை அணுகுவதற்கான வசதியை ஏற்படுத்தித் தரும் திட்டங்களை வழங்குவதற்குப் பொறுப்பேற்றுள்ளன. அவசரநிலை மற்றும் மருத்துவரீதியாக அவசியமான பராமரிப்பை அணுகுவதற்கு, இந்தச் சேவைகளுக்குப் பணம் செலுத்தும் திறன் ஒரு தடையாக இருக்கும்போது காப்பீடு செய்துகொள்ளாத மற்றும் குறைந்த தொகைக்குக் காப்பீடு செய்துள்ள வருமானம் குறைவாக உள்ள நோயாளிகளுக்கு நிதி உதவிகளை வழங்குவதும் இந்தப் பொறுப்பேற்பில் அடங்கும்.

## 2.0 நோக்கம்

Medical Financial Assistance (MFA) திட்டம் வழியாக அவசரநிலை மற்றும் மருத்துவரீதியாக அவசியமான பராமரிப்பைப் பெறுவதற்குத் தகுதிபெறுவதற்கான தேவைகளை இந்த பாலிசி விளக்குகிறது. இந்தத் தேவைகள் அமெரிக்க உள்துறை வருமான விதியின் பிரிவு 501(r)க்கு இணங்குவது என்பதுடன் தகுதியுள்ள சேவைகள், அணுகலைப் பெறும் முறை, திட்டத்திற்கான தகுதிநிலை அளவுகோல், MFA விருதுகளின் கட்டமைப்பு, விருதுத் தொகைகளைக் கணக்கிடுவதற்கான அடிப்படை மற்றும் மருத்துவச் செலவுகளை செலுத்த முடியாத நிலையில் அனுமதிக்கப்படக்கூடிய செயல்பாடுகள் ஆகியவற்றை குறிப்பிடுகின்ற மாகாண நெறிமுறைகளுக்குப் பொருந்துவதாகும்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

## 3.0 வாய்ப்பு

பின்வரும் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் துணைநிறுவனங்களால் வேலைக்கு அமர்த்தப்பட்ட பணியாளர்களுக்கு இந்த பாலிசி பொருந்தும் (ஒட்டுமொத்தமாக "KFHP/H" எனப்படுவது):

**3.1** Kaiser Foundation Health Plan, Inc. (KFHP);

**3.2** Kaiser Foundation Hospitals (KFH); மற்றும்

**3.3** KFHP/H துணை நிறுவனங்கள்.

**3.4** இந்த பாலிசியானது Kaiser Foundation Hospitals மற்றும் *Kaiser Permanente பிரதேசங்களுக்கான பிற்சேர்க்கைகள், இணைப்புகள் 1-8* இல் பட்டியலிடப்பட்டுள்ள மருத்துமனையின் உதவிபெறும் கிளினிக்குகளுக்குப் பொருந்தும்.

## 4.0 வரையறைகள்

பார்க்கவும் *பிற்சேர்க்கை A – சொற்களஞ்சியம்*.

## 5.0 ஒதுக்கீடுகள்

நோயாளியின் வயது, இயலாமை, பாலினம், இனம், மதச் சார்புநிலை அல்லது புலம்பெயர் நிலை, பாலியல் சார்புநிலை, பூர்வீக தேசம் மற்றும் அந்த நோயாளிக்கு மருத்துவ காப்பீடு இருக்கிறதா என்பவை பற்றியெல்லாம் பொருட்படுத்தாமல் அவசரநிலை மற்றும் மருத்துவரீதியாக அவசியமான பராமரிப்பைப் பெறுவதற்குத் தகுதியுள்ள நோயாளிகளுக்காக KFHP/H நிதியுதவித் தகுதிச் சோதனைகள் செய்யப்பட்ட MFA திட்டத்தை மேற்கொண்டு வருகிறது.

### 5.1 MFA பாலிசியின் கீழ் தகுதிபெறுகின்ற மற்றும் தகுதிபெறாத சேவைகள்

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.1.1 தகுதிபெறும் சேவைகள்.** MFA குறிப்பிட்ட (1) அவசரநிலை பராமரிப்பு உட்பட மருத்துவரீதியாக அவசியமான உடல்நல பராமரிப்பு சேவைகள்; (2) மருந்தக சேவைகள் மற்றும் தயாரிப்புகள்; மற்றும் (3) Kaiser Permanente (KP) மையங்களில் (எ.கா., மருத்துவமனைகள், மருத்துமனையின் உதவிபெறும் கிளினிக்குகள், மருத்துவ மையங்கள் மற்றும் மருத்துவ அலுவலகக் கட்டங்கள்), KFHP/H வெளிநோயாளிகளுக்கு, அஞ்சல் ஆர்டர் மற்றும் சிறப்பு மருந்தகங்கள் அல்லது கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி KP வழங்குனர்களால் வழங்கப்பட்ட மருத்துவப் பொருட்கள்:

**5.1.1.1 மருத்துவரீதியாக அவசியமான சேவைகள்.** மருத்துவ நிலை தடுப்பு, மதிப்பீடு, நோயறிதல் அல்லது சிகிச்சைக்காகத் தேவைப்படுகின்ற மற்றும் முக்கியமாக நோயாளி அல்லது மருத்துவ பராமரிப்பு வழங்குனரின் வசதிக்காக அன்றி, KP வழங்குனரால் ஆர்டர் செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட பராமரிப்பு, சிகிச்சை அல்லது சேவைகள்.

**5.1.1.2 பரிந்துரைகள் மற்றும் மருந்தகப் பொருட்கள்.** KFHP/H மருந்தகத்தில் வழங்கப்பட்ட, KP வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்த வழங்குனர்கள், KP அல்லாத அவசரநிலை துறை மற்றும் அவசரநிலை பராமரிப்பு வழங்குனர்கள், பல் மருத்துவத்துறை மருந்து மருத்துவர்கள் (DMD) மற்றும் பல் அறுவைசிகிச்சை மருத்துவர்கள் (DDS) ஆகியோரால் எழுதப்பட்ட பரிந்துரைகள்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.1.1.2.1 பொதுவின மருந்துகள்.** சாத்தியமுள்ள இடங்களிலெல்லாம் பொதுவின மருந்துகளைப் பயன்படுத்துதலுக்கு முன்னுரிமையளிக்கப்படுகிறது.

**5.1.1.2.2 பிராண்ட் மருந்துகள்.** KP வழங்குனரால் பரிந்துரைக்கப்பட்ட பிராண்ட் பெயருள்ள மருந்துகள் தகுதிபெறுவது:

**5.1.1.2.2.1** பரிந்துரையில் “எழுதப்பட்டபடி வழங்கவும்” (DAW) என்பது குறிப்பிடப்பட்டிருந்தால், அல்லது

**5.1.1.2.2.2** சமமான பொதுவின மருந்துகள் கிடைக்காதபோது.

**5.1.1.2.3 கடையில் வாங்கும் மருந்துகள் அல்லது மருந்தகம் தருபவை.** இந்தத் தயாரிப்புகள் தகுதிபெறுவது:

**5.1.1.2.3.1** KP வழங்குனர் பரிந்துரை அல்லது ஆர்டரை எழுதியிருக்கும்போது;

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.1.1.2.3.2** உருப்படியானது KP மருந்தகத்தில் வழங்கப்படும்போது; மற்றும்

**5.1.1.2.3.3** உருப்படியானது KP மருந்தகத்தில் வழக்கமாகக் கிடைக்கும்போது.

**5.1.1.2.4** **Medicare பயனாளிகள்.** மருந்தகத் தள்ளுபடி என்ற வடிவில் Medicare பகுதி D இன் கீழ் வரும் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளுக்காக Medicare பயனாளிகளுக்குப் பொருந்துவது.

**5.1.1.2.5** **பல் மருந்துகள்.** DMD அல்லது DDS ஆல் பரிந்துரைக்கப்பட்ட வெளிநோயாளி மருந்துகளானவை பல்மருத்துவ சிகிச்சை சேவைகளுக்கு மருத்துவரீதியில் அவசியமானவை என்றால் ஏற்றுக்கொள்ளக்கூடியவை ஆகும்.

**5.1.1.3** **நீடித்து நிலைக்கும் மருத்துவ உபகரணம் (DME).** KP மையங்களில் தொடர்ந்து கிடைக்கின்ற மற்றும் மருத்துவ அவசிய அளவீட்டை பூர்த்திசெய்த நோயாளிக்கு KFHP/H ஆல் வழங்கப்பட்ட உபகரணம் வரையே பொருந்தக்கூடிய DME வரம்பிற்குட்படுத்தப்பட்டுள்ளது. DME வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப KP வழங்குனரால் DME ஆர்டர் செய்யப்பட வேண்டும்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.1.1.4 Medicaid மறுக்கப்பட்ட சேவைகள்.** மாநில Medicaid திட்டத்திற்குள் இல்லாத ஆனால் மருத்துவரீதியாக அவசியமானது என தீர்மானிக்கப்பட்டு KP வழங்குனரால் ஆர்டர் செய்யப்பட்ட (எ.கா., பிறந்த குழந்தைக்கு ஆண்குறி முன்தோல் நீக்கம், ஹெர்னியா சேவைகள், மருந்தாக்கியல் மருந்துக்கலவைகள், அறிகுறிகளுக்குச் சிகிச்சையளிப்பதற்கான மருந்துகள், மற்ற பிற.) மருத்துவ சேவைகள், பரிந்துரைகள், மருந்தகப் பொருட்கள் மற்றும் DME.

**5.1.1.5 உடல்நலக் கல்வி வகுப்புகள்.** நோயாளியின் பராமரிப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக KP வழங்குனரால் பரிந்துரைக்கப்பட்டு KP ஆல் திட்டமிடப்பட்டு வழங்கப்படுகின்ற வகுப்புகள்.

**5.1.1.6 விதிவிலக்கு அடிப்படையில் கிடைக்கும் சேவைகள்.** கீழே விளக்கப்பட்டுள்ள அதிக மருத்துவ செலவு தகுதி தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற, மருத்துவமனையில் இருந்து உள்நோயாளி பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படுவதற்கு வசதி தேவைப்படும் சேவைகள் மற்றும் பொருட்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, குறிப்பிட்ட விதிவிலக்கான சூழ்நிலைகளில் MFA பொருந்தக்கூடும், பிரிவு 5.6.2.ஐப் பார்க்கவும். நோயாளி அந்தத் தேவையைப் பூர்த்திசெய்தால், அதில் KP அல்லாத மையத்தில் வழங்கப்படும் திறமைமிக்க நர்சிங், இடைநிலை பராமரிப்பு மற்றும் காப்பக சேவைகள் ஆகியவை காப்பீட்டு சேவைகளில் அடங்கக்கூடும். பொருட்கள்

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

என்பவற்றில் கீழே விளக்கப்பட்டுள்ளபடி ஒப்பந்ததாரர்/விற்பனையாளரால் வழங்கப்பட்ட DME பரிந்துரைத்தவை அல்லது KP வழங்குனர் ஆர்டர் செய்தவை அடங்கியிருக்கலாம்.

**5.1.1.6.1 திறமைமிக்க நர்சிங், இடைநிலை பராமரிப்பு மற்றும் காப்பக சேவைகள்.** மருத்துவமனையில் இருந்து உள்நோயாளி அனுப்பி வைக்கப்படுவதற்கு வசதி ஏற்படுத்தித் தருவதற்கு தேவைப்படும் பரிந்துரைக்கப்பட்ட மருந்துடன் நோயாளிக்கு ஒப்பந்த KP மையத்தால் வழங்கப்படுவது.

**5.1.1.6.2 நீடித்து நிலைக்கும் மருத்துவ உபகரணம் (DME).** DME வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப KP வழங்குனரால் ஆர்டர் செய்யப்பட்ட விற்பனையாளர் வழங்கிய மற்றும் KFHP/H DME துறை வழியாக ஒப்பந்த விற்பனை யாளரால் வழங்கப்பட்ட DME.

**5.1.2 தகுதிபெறாத சேவைகள்.** MFA பொருந்தாத சூழல்கள்:

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.1.2.1 KP வழங்குனரால் தீர்மானிக்கப்பட்டபடி அவசரமானவை அல்லது மருத்துவரீதியில் அவசியமானவை என்று கருதப்படாத சேவைகள்.** பின்வருவது, அவசரமானவை அல்லது மருத்துவரீதியில் அவசியமானவை அல்லாத சேவைகளின் உதாரணங்களுடைய முழுமையடையாத பட்டியல்:

**5.1.2.1.1** காஸ்மெடிக் அறுவை சிகிச்சை அல்லது சேவைகள், இதில் ஒரு நோயாளின் தோற்றத்தை மேம்படுத்தும் நோக்கத்தையே முதன்மையாகக் கொண்ட தோல்மருத்துவ சேவைகளும் அடங்கும்.

**5.1.2.1.2** நோய் கண்டறிதல் உட்பட மகப்பேறின்மை சிகிச்சைகள் மற்றும் அது தொடர்பான சேவைகள்.

**5.1.2.1.3** சில்லறை மருந்துப் பொருட்கள்.

**5.1.2.1.4** அக்குபன்ச்சர், சைரோபிராக்டிக் மற்றும் மசாஜ் சேவைகள் உள்ளிட்ட மாற்று சிகிச்சைகள்.

**5.1.2.1.5** பாலியல் செயல்பாடின்மை சிகிச்சைக்கான ஊசிகள் மற்றும் சாதனங்கள்.

**5.1.2.1.6** வாடகைத்தாய் சேவைகள்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.1.2.1.7** மூன்றாம் தரப்பினரின் பொறுப்பு, தனிப்பட்ட காப்பீட்டு பாதுகாப்பு அல்லது தொழிலாளர்கள் இழப்பீட்டு வழக்குகள் தொடர்புடைய சேவைகள்.

**5.1.2.1.8** **KP-அல்லாத உடல்நல காப்பீட்டுடன் நோயாளிகளுக்கான சேவைகள்.** விருப்பமான KP அல்லாத வழங்குனர்கள் மற்றும் மருந்தகங்களின் குறிப்பிட்ட நெட்வொர்க்கை நோயாளிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டியுள்ள, நோயாளியின் KP அல்லாத உடல்நல காப்பீட்டின் கீழ் வருகின்ற அவசரநிலை இல்லாத அல்லது அவசரம் தேவை இல்லாத சேவைகள் மற்றும் வெளிநோயாளி மருந்தகப் பொருட்கள்.

**5.1.2.2** **அவசரமானவை அல்லது மருத்துவரீதியில் அவசியமானவை என்று கருதப்படாத மருந்து பரிந்துரைப்புகள் மற்றும் மருந்தகப் பொருட்கள்.** அவசரமானவை அல்லது மருத்துவரீதியில் அவசியமானவை என்று கருதப்படாத மருந்து பரிந்துரைப்புகள் மற்றும் மருந்தகப் பொருட்களில் அடங்குபவை, ஆனால் இவை மட்டுமல்ல:

**5.1.2.2.1** மருந்தக மற்றும் சிகிச்சைகள் குழுவால் அங்கீகரிக்கப்படாத மருந்துகள்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.1.2.2.2** KP வழங்குனரால் பரிந்துரைக்கப்படாத அல்லது ஆர்டர் செய்யப்படாத கடையில் கேட்டு வாங்கும் மருந்துகள் மற்றும் பொருட்கள்.

**5.1.2.2.3** KP மருந்தகத்தில் வழக்கமாகக் கிடைக்காத மற்றும் பிரத்யேகமாக ஆர்டர் செய்யப்பட வேண்டியுள்ள கடையில் கேட்டு வாங்கும் மருந்துகள் மற்றும் பொருட்கள்.

**5.1.2.2.4** மூன்றாம் தரப்பினரின் பொறுப்பு, தனிப்பட்ட காப்பீட்டு பாதுகாப்பு அல்லது தொழிலாளர்கள் இழப்பீட்டு வழக்குகள் தொடர்புடைய பரிந்துரைகள்.

**5.1.2.2.5** குறிப்பிட்ட முறையில் சேர்க்கப்படாத மருந்துகள் (எ.கா., மகப்பேறு, காஸ்மெடிக், பாலியல் செயல்பாடின்மை).

**5.1.2.3 Low Income Subsidy (LIS) திட்டத்திற்கு தகுதியானவர்கள் மற்றும் பதிவுசெய்துள்ள Medicare பகுதி D பதிவாளர்களுக்கான பரிந்துரைகள்.** Centers for Medicare & Medicaid Services (CMS) என்பதன் வழிகாட்டுதல்களின்படி LIS திட்டத்திற்கு தகுதியுள்ள அல்லது பதிவுசெய்துள்ள Medicare Advantage பகுதி D பதிவாளர்களுக்கான பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளுக்கான மீதமுள்ள செலவின பங்கீடு.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.1.2.4 KP மையங்களுக்கு வெளியில் வழங்கப்படும் சேவைகள்.** KP மையங்கள் அல்லது KP வழங்குனர்களால் வழங்கப்படும் சேவைகளுக்கு மட்டுமே MFA பாலிசி பொருந்துகிறது.

**5.1.2.4.1** KP வழங்குனரின் பரிந்துரையின் பேரில் என்றாலும்கூட, மற்ற அனைத்து சேவைகளும் MFAக்குத் தகுதிபெறாதவையாகும்.

**5.1.2.4.2** KP அல்லாத மருத்துவ அலுவலகங்கள், அவசரநிலை பராமரிப்பு மையங்கள் மற்றும் அவசரகால மருத்துவத் துறைகள் மற்றும் KP அல்லாத வீட்டுச் சுகாதாரம், பராமரிப்பகம், மீட்புப் பராமரிப்பு மற்றும் காப்பக பராமரிப்பு சேவைகள் ஆகியவற்றில் வழங்கப்படும் சேவைகள் மேலேயுள்ள பிரிவு 5.1.1.6 இன்படி விதிவிலக்கானவை என அடையாளம் காணப்பட்டால் தவிர நீக்கப்படக்கூடியவை.

**5.1.2.5 நீடித்து நிலைக்கும் மருத்துவ உபகரணம் (DME).** KP வழங்குனரால் ஆர்டர் செய்யப்பட்டதாக இருந்தாலும், பிரிவு 5.1.1.6 இன்படி விதிவிலக்கானவை என அடையாளம் காணப்பட்டால் தவிர ஒப்பந்த விற்பனையாளரால் வழங்கப்பட்ட DME நீக்கப்படக்கூடியதாகும்.

**5.1.2.6 போக்குவரத்து சேவைகள் மற்றும் பயணச் செலவுகள்.** நோயாளிகள் அவசரநிலை அல்லது அவசரநிலை

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

அல்லாத போக்குவரத்து அல்லது பயணம் சம்பந்தப்பட்ட செலவுகளுக்குச் செலுத்த (எ.கா., தங்குமிடம் மற்றும் உணவு) MFA திட்டம் உதவுவதில்லை.

**5.1.2.7 உடல்நல பிரீமியம் திட்டங்கள்.** MFA திட்டமானது உடல்நல பராமரிப்பு காப்பீட்டுடன் தொடர்புடைய செலவுகளுக்குச் (எ.கா., தவணைகள் அல்லது பிரீமியம்கள்) செலுத்த நோயாளிகளுக்கு உதவுவதில்லை.

**5.1.3** தொடர்புடைய பிற்சேர்க்கையில் காணப்படும் பிரதேசத்திற்கே உரிய தகுதியுள்ள மற்றும் தகுதிபெறாத சேவைகள் மற்றும் தயாரிப்புகள் குறித்த கூடுதல் தகவல்கள். பார்க்கவும் *Kaiser Permanente பிரதேசங்களுக்கான பிற்சேர்க்கை, இணைப்புகள் 1-8*.

**5.2 வழங்குனர்கள்.** MFA கொள்கை பொருந்துகின்ற மருத்துவப் பராமரிப்பு வழங்குனர்களால் வழங்கப்பட்ட தகுதிபெற்ற சேவைகளுக்கு மட்டுமே MFA பாலிசி பயன்படுத்தப்படுகிறது. பார்க்கவும் *Kaiser Permanente பிரதேசங்களுக்கான பிற்சேர்க்கை, இணைப்புகள் 1-8*.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

5.3 **திட்டத்தின் தகவல்கள் மூலாதாரங்கள் மற்றும் MFAக்கு விண்ணப்பிக்கும் முறை.** MFA திட்டம் குறித்த கூடுதல் தகவல்கள் மற்றும் விண்ணப்பிக்கும் முறை ஆகியவை தொடர்புடைய பிற்சேர்க்கையில் சுருக்கமாக வழங்கப்பட்டுள்ளன. பார்க்கவும் *Kaiser Permanente பிரதேசங்களுக்கான பிற்சேர்க்கை, இணைப்புகள் 1-8*.

5.3.1 **திட்டத்தின் தகவல்கள் மூலாதாரங்கள்.** MFA பாலிசியின் நகல்கள், விண்ணப்பப் படிவங்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் எளிமையாக விளக்கப்பட்ட சுருக்கங்கள் (எ.கா., பாலிசி சுருக்கங்கள் அல்லது திட்டத்தின் சிறுவெளியீடுகள்) ஆகியவை மின்னஞ்சல் மூலம், நேரடியாக அல்லது அமெரிக்க அஞ்சல் மூலம், KFHP/H இணையதளத்தில் கட்டணம் எதுவுமில்லாமல் பொதுமக்களுக்குக் கிடைக்கின்றன.

5.3.2 **MFAக்கு விண்ணப்பித்தல்.** MFA திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கு ஒரு நோயாளியானவர் KP சேவைகளுக்கான நிலுவையிலுள்ள மீதத்தொகைக்கான ரசீதினால் ஏற்பட்ட உடனடி தேவை, KP உடன் திட்டமிட்ட சந்திப்பு அல்லது மேலே குறிப்பிட்டுள்ளபடி தகுதிபெற்ற சேவைகளுக்காக KP வழங்குனரால் ஆர்டர் செய்யப்பட்ட ஒரு மருந்தக பரிந்துரைச் சீட்டை காட்டியாக வேண்டும். ஆன்லைனில், நேரடியாக, தொலைபேசி வழியாக அல்லது காகித விண்ணப்பம் மூலம் ஆகியவை உட்பட ஒரு நோயாளி MFA திட்டத்திற்கு விண்ணப்பிக்க பல வழிகள் உள்ளன.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.3.2.1 KP MFA திட்டம்.** நோயாளிகள் KP இல் சேவைகளைப் பெறுகின்ற KP சேவை பகுதியிலேயே MFA திட்டத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

**5.3.2.2 பொது மற்றும் தனியார் திட்டத்திற்கு தகுதிபெறுவதற்கான நோயாளிகள் தகுதி காணல்.** உடல்நல சேவைகளுக்கான அணுகல், ஒட்டுமொத்த தனிப்பட்ட உடல்நலன் மற்றும் நோயாளியின் சொத்துகளுடைய பாதுகாப்பிற்கு என உடல்நல காப்பீட்டை பெறுவதற்கு அனைத்து தனிநபர்களையும் KFHP/H ஊக்கப்படுத்துகிறது. உடல்நல பலன் மாற்றக்கத்தில் கிடைக்கின்ற Medicaid மற்றும் காப்பீடு உட்பட கிடைக்கின்ற உதவித் திட்டங்களுக்கு அடையாளம் காணப்பட்டு விண்ணப்பிக்க காப்பீடு செய்யாத நோயாளிகள் அல்லது அவர்களுக்கு உத்தரவாதமளிப்போருக்கு KFHP/H உதவும். உடல்நல பலன் மாற்றக்கத்தில் கிடைக்கின்ற Medicaid மற்றும் காப்பீட்டிற்குத் தகுதியுள்ளவராகக் கருதப்படும் நோயாளி அந்தத் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கலாம். Medicaid வருமானத் தகுதிநிலை தேவைகளை விட அதிகமான நிதிநிலை தகுதியுள்ள நோயாளிகள் Medicaidக்கு விண்ணப்பிக்க வேண்டாம்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.4 MFAக்கு விண்ணப்பிக்கத் தேவையான தகவல்கள்.** MFA திட்டத்திற்கான தகுதிநிலை மற்றும் உடல்நல பலன் மாற்றக்கத்தில் கிடைக்கும் Medicaid மற்றும் மானியமுள்ள காப்பீடு ஆகியவற்றுக்கான தகுதிநிலையைத் தீர்மானிக்க நோயாளியின் நிதி நிலையை சரிபார்ப்பதற்கு முழுமையான தனிப்பட்ட, நிதிசார்ந்த மற்றும் பிற தகவல்கள் தேவைப்படுகின்றன. நோயாளி உதவிக்காக விண்ணப்பின்ற ஒவ்வொரு முறையும் நோயாளியின் நிதி நிலை சரிபார்க்கப்படுகிறது.

**5.4.1 நிதிநிலை தகவல்களை வழங்குதல்.** நோயாளிகள் தங்களுடைய MFA விண்ணப்பத்துடன் வீட்டின் அளவு மற்றும் வீட்டு வருமானத் தகவல்களை சேர்க்க வேண்டும், இருப்பினும், KP ஆல் குறிப்பிட்டு கேட்கப்பட்டால் தவிர நிதிநிலை சரிபார்ப்பை அனுமதிக்க நிதிநிலை ஆவணங்களைச் சமர்ப்பிப்பது விருப்பத்தேர்வானதாகும்.

**5.4.1.1 நிதிநிலை அறிக்கைகள் இல்லாமல் நிதிநிலையை சரிபார்த்தல்.** நிதிநிலை ஆவணமாக்கல் MFA விண்ணப்பத்தில் சேர்க்கப்படவில்லை என்றால், நோயாளியின் நிதிநிலையானது வெளிப்புற தரவு மூலங்களைப் பயன்படுத்தி சரிபார்க்கப்படும். வெளிப்புற தரவு மூலங்களைப் பயன்படுத்தி நோயாளியின் நிதிநிலையை சரிபார்க்க முடியவில்லை என்றால், அவர்களுடைய நிதிநிலையை சரிபார்க்க அனுமதிப்பதற்கு MFA திட்ட விண்ணப்பத்தில் விளக்கப்பட்டுள்ள நிதி ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு நோயாளியிடம் கேட்டுக்கொள்ளப்படலாம்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.4.1.2 நிதி ஆவணமாக்கல் மூலம் நிதிநிலையை சரிபார்த்தல்.** நிதி ஆவணமாக்கலானது MFA விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருந்தால், தகுதிநிலையானது வழங்கப்பட்ட தகவல்களைப் பொறுத்து அமையும்.

**5.4.2 முழுமையான தகவல்களை வழங்குதல்.** MFA திட்ட தகுதிநிலையானது தேவையான தனிப்பட்ட, நிதி மற்றும் பிற தகவல்கள் பெறப்பட்டதும் தீர்மானிக்கப்படும்.

**5.4.3 முழுமையற்ற தகவல்கள்.** பெறப்பட்டுள்ள தேவையான தகவல்கள் முழுமையற்றதாக இருந்தால் அதுகுறித்து ஒரு நோயாளிக்கு நேரடியாக, மின்னஞ்சல் மூலம் அல்லது தொலைபேசி வழியாகத் தெரிவிக்கப்படும். நோயாளியானவர் தவறவிட்ட தகவல்களை 30 நாட்களுக்குள் இவற்றில் ஏதாவது ஒன்றிற்குள் சமர்ப்பிக்கலாம்: அறிவிப்பு அஞ்சல் செய்யப்பட்ட தேதியிலிருந்து, நேரடி உரையாடல் நடைபெற்றதிலிருந்து அல்லது தொலைபேசி வழி உரையாடலில் இருந்து. முழுமையற்ற தகவல்களின் காரணமாக MFA மறுக்கப்படலாம்.

**5.4.4 தேவையான தகவல்கள் கிடைக்கவில்லை.** திட்ட விண்ணப்பத்தில் விளக்கப்பட்டுள்ள தேவையான தகவல்கள் இல்லாத ஒரு நோயாளியானவர் தகுதிநிலையை நிரூபிப்பதற்குக் கிடைக்கக்கூடிய மற்ற ஆவணங்கள் குறித்து ஆலோசிக்க KFHP/Hஐ தொடர்புகொள்ளலாம்.

**5.4.5 நிதிநிலை தகவல்கள் எதுவும் இல்லை.** ஒரு நோயாளி குறைந்தபட்சம் அடிப்படையான நிதிநிலை தகவல்களை (எ.கா., வருமானம்,

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

எதுவாகினும், அதன் மூலம்) வழங்க வேண்டும் என்பதுடன் பின்வரும் நிலைகளின்போது சான்றளிக்க வேண்டும்: (1) அவர்களுடைய நிதிநிலையை வெளிப்புற தரவு மூலங்களைப் பயன்படுத்தி சரிபார்க்க முடியாதபோது; (2) தேவையான நிதிநிலை தகவல்கள் கிடைக்காதபோது; மற்றும் (3) தகுதிநிலையை நிரூபிக்கின்ற வேறு எந்த ஆவணமாக்கலும் இல்லாதபோது. பின்வருவனவற்றுள் ஏதேனும் பொருந்தும் என்றால் நோயாளியிடமிருந்து அடிப்படை நிதிநிலை தகவல்களும் சான்றளிப்பும் தேவைப்படுகிறது:

**5.4.5.1** நோயாளி வீடற்றவர் அல்லது வீடற்றோர் கிளினிக்கில் பராமரிப்பு பெறுபவர்.

**5.4.5.2** நோயாளிக்கு வருமானம் எதுவுமில்லை, தங்களுடைய பணி வழங்குனரிடமிருந்து வழக்கமான ஊதியம் பெறுவதில்லை (சுய-வேலைவாய்ப்புள்ளவர்கள் தவிர), பணப் பரிசுகளைப் பெறுவதில்லை அல்லது முந்தைய வரி ஆண்டில் உள்நாட்டு அல்லது மாநில வருமான வரி அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டியிருக்கவில்லை.

**5.4.5.3** நோயாளியானவர் நன்கு தெரிந்த தேசிய அல்லது பிரதேச பேரிடர் அல்லது பொது உடல்நலன் அவசரநிலையால் பாதிக்கப்பட்டிருப்பவர் (கீழேயுள்ள பிரிவு 5.11ஐ பார்வையிடவும்).

**5.4.6 நோயாளி ஒத்துழைப்பு.** தேவையான அனைத்து தகவல்களையும் வழங்குவதற்கு ஒரு நோயாளி நியாயமான முயற்சி எடுக்க வேண்டும். தேவையான அனைத்து தகவல்களும்

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

வழங்கப்படவில்லை என்றால், தகுதிநிலையை தீர்மானிக்கும்போது சூழ்நிலைகள் கருத்தில் கொள்ளப்படலாம்.

**5.5 உத்தேசமான தகுதிநிலை தீர்மானித்தல்.** நோயாளிக்கு நிலுவைத்தொகை இருக்கின்ற, KP தொடர்புகொள்ள முயற்சிப்பதற்கு பதிலளிக்காமல் இருக்கின்ற மற்றும் விண்ணப்பிக்கவில்லை என்றாலும் மற்ற கிடைக்கின்ற தகவல்கள் நிதிவகையில் சிரமம் என்பதை உறுதிப்படுத்துகின்ற சூழ்நிலைகளில் விண்ணப்பம் நிறைவுசெய்யப்படவில்லை என்றாலும் நிதியுதவி அனுமதிக்கப்படலாம். தகுதியுள்ளவர் என்று தீர்மானிக்கப்பட்டால், நோயாளி தனது தனிப்பட்ட, நிதிசார்ந்த அல்லது பிற தகவல்களை நிதிநிலையை சரிபார்க்க வழங்க வேண்டியதில்லை என்பதுடன் அவருக்கு தாமாகவே MFA வழங்கப்படும். உத்தேசமான தகுதிநிலை தீர்மானித்தலுக்கான காரணம் மற்றும் ஆதரவான தகவல்கள் நோயாளியின் கணக்கில் ஆவணப்படுத்தப்பட்டு, கூடுதல் நோயாளி குறிப்புகள் சேர்க்கப்படலாம். நோயாளியானவர் முன்னதாகவே தகுதிபெற்று அல்லது நிதிவகையில் சிரமப்படுவதற்கான அறிகுறிகள் இருந்தால் அவர் தகுதிபெற்றவராக உத்தேசிக்கப்பட்டு, ஆவணத்திற்கான தேவைகளுக்கு விலக்களிக்கப்படும்.

**5.5.1 முன் தகுதி.** நோயாளி பதிவுசெய்யப்பட்டிருப்பது அல்லது கீழே குறிப்பிட்டுள்ளபடி பொது மற்றும் தனியார் உதவித் திட்டங்களுக்குத் தகுதிபெறுவதற்கான நிதிநிலை தகுதிகாணல் செயல்முறையால் தீர்மானிக்கப்பட்டிருப்பதற்கான ஆதாரம் இருக்கின்ற சூழ்நிலைகளில் அவர் MFA திட்டத்திற்கு தகுதியுள்ளவராக உத்தேசிக்கப்படுகிறார் (அதாவது, முன்தகுதி பெறுகிறார்). பின்வரும் வரன்முறைகளில்

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

எதையேனும் நோயாளி பூர்த்திசெய்பவராக இருந்தால் அவர் முன்தகுதி பெற்றவராகக் கருதப்படுகிறார்:

**5.5.1.1** இவற்றின் வழியாக நோயாளிகள் பரிந்துரைக்கப்பட்டு முன்தகுதி பெறுவதற்கு சமூக MFA (CMFA) திட்டத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பது: (1) உள்நாட்டு, மாநில அல்லது உள்ளூர் நிர்வாகம், (2) கூட்டாளராகவுள்ள சமூகம்-சார்ந்த அமைப்பு, அல்லது (3) ஒரு KFHP/H ஸ்பான்சர் செய்த சமூக உடல்நலன் நிகழ்வில்.

**5.5.1.2** குறைந்த வருமானமுள்ள நோயாளிகளைப் பராமரிப்பதற்கான அணுகலுக்கு ஆதரவாக வடிவமைக்கப்பட்ட KP சமூக பயன் திட்டத்தில் பதிவுசெய்திருப்பது மற்றும் KFHP/H பணியாளராக நியமிக்கப்பட்டவரால் முன்தகுதி பெற்றவராக இருப்பது.

**5.5.1.3** பதிவு செய்துள்ள அல்லது நம்பத்தகுந்த நிதியுதவித் தகுதிச் சோதனை காப்பீடு திட்டத்தில் தகுதிபெற்றவராக உத்தேசிக்கப்படுபவராக இருப்பது (எ.கா., Medicaid, Medicare Low Income Subsidy திட்டம், உடல்நல பலன் பரிமாற்றகத்தில் கிடைக்கும் மானியமளிக்கப்பட்ட காப்பீடு).

**5.5.1.4** நம்பத்தகுந்த நிதியுதவித் தகுதிச் சோதனைகள் செய்யப்பட்ட பொது உதவித் திட்டத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பது (எ.கா., பெண்கள், குழந்தைகள் மற்றும் சிறார் திட்டங்கள், துணைநிலை ஊட்டச்சத்து மற்றும் உதவித் திட்டங்கள், குறைந்த-வருமானமுள்ள குடும்ப ஆற்றல்

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.

உதவித் திட்டங்கள், இலவசமான அல்லது விலை குறைக்கப்பட்ட செலவில் மதிய உணவு திட்டங்கள்).

**5.5.1.5** குறைவான வருமானம் கொண்ட அல்லது மானியத்தில் வழங்கிய வீட்டில் வசிப்பது.

**5.5.1.6** கடைசி 30 நாட்களுக்குள் தொடங்கிய MFA ஒதுக்கீடு முன்னதாக வழங்கப்பட்டிருப்பது.

**5.5.2 நிதிவகையில் சிரமப்படுவதற்கான ஆதாரங்கள்.** ஒரு KP மையத்தில் பராமரிப்பைப் பெறுகின்ற நோயாளி மற்றும் நிதிவகையில் சிரமப்படுகிறவர்கள் (எ.கா., கடந்தகால நிலுவையில் உள்ள மீதங்கள் அல்லது செலுத்துவதற்கான திறனின்மை) திட்டத்தில் தகுதிபெறுவதற்கு KP ஆல் ஆய்வு செய்யப்படலாம் என்பதுடன் நிதிவகையில் சிரமப்படுவதற்கு வெளிப்புற தரவு மூலங்கள் பயன்படுத்தப்படலாம். தகுதி இருக்கிறதென்றால், தகுதியுள்ள நிலுவையிலுள்ள தொகைகளுக்காக மட்டும் MFA ஒதுக்கீட்டை நோயாளி பெறுவார்.

**5.5.2.1 KP ஆல் தீர்மானிக்கப்படும் தகுதிநிலை.** நோயாளிகளின் நிலுவையிலுள்ள தொகைகள் கடன் வசூலிப்பு நிறுவனங்களிடம் வழங்கப்படும் முன்னரே திட்டத்திற்கான தகுதிக்கு அவர்களை KP ஆய்வு செய்யலாம்.

**5.5.2.1.1 நிலுவையிலுள்ள சுய-செலுத்தல் தொகைகள்.** நோயாளிகளின் நிலுவையிலுள்ள தொகைகள் கடன் வசூலிப்பு நிறுவனங்களிடம் வழங்கப்படுவதற்காக அடையாளம் காணப்பட்டுள்ள, நிதியுதவித் தகுதிச் சோதனைகள்

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

அடிப்படையில் திட்டத்திற்கான தகுதிக்கு அவர்களை KP ஆய்வு செய்யலாம். கீழே பிரிவு 5.6.1ஐப் பார்க்கவும்.

**5.5.2.1.2 நிதிவகையில் சிரமப்படுவதற்கான ஆதாரங்கள்.** நிலுவையில் உள்ள தொகைகள் கொண்டுள்ள சில நோயாளிகளுக்கான நிதிசார்ந்த தகவல்கள் தகுதியைத் தீர்மானிப்பதற்கு கிடைக்காமல் போகலாம், ஆனால் KPக்குத் தெரிய வருகின்ற நிதிவகை சிரமத்தின் பிற குறைவான வருமான ஆதாரத்தைத் தீர்மானிக்க வழிவகுக்கலாம். தகுதியுள்ள நிலுவை தொகைகள் MFA திட்டத்திற்கு பொருந்தும் என்பதுடன் மேற்கொண்டு வசூலிப்பு நடவடிக்கைகளுக்கு உள்ளாகாது. நிதிவகை சிரமத்தின் அறிகுறிகளில் பின்வருபவையும், இவை மட்டுமே அல்லாதவையும் அடங்கும்:

**5.5.2.1.2.1** நோயாளியானவர் ஸ்பான்சர்ஷிப், சமூகப் பாதுகாப்பு எண், வரி ஆவணங்கள் அல்லது சரியான ரசீதுக்குரிய முகவரிகள் இல்லாத அமெரிக்கரல்லாத குடிமகன்; தங்களுடைய கணக்கு

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

குறித்து KPயிடம் தெரிவிக்காதவர்; அத்துடன் நோயாளியானவர் தன்னுடைய சொந்த நாட்டில் நிதிவகையிலோ சொத்துவகையிலோ எந்த மூலாதாரமும் இல்லாதவர் என்பதை நியாயப்படியான வசூலிப்பு முயற்சிகள் காட்டுகின்றன.

**5.5.2.1.2.2** நோயாளியானவர் முன்னதாக வழங்கப்பட்ட KP சேவைகளுக்கான தொகைகளை நிலுவையில் வைத்துள்ளார் என்பதுடன் நீண்டகாலத்திற்குச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்; திருமணமாகாதவர்; வருமானத்திற்கான எந்த ஆதாரமும் இல்லை; அத்துடன் KP ஆல் அந்த நோயாளியை தொடர்புகொள்ள முடியவில்லை.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.5.2.1.2.3** நோயாளியானவர் எந்தவித எஸ்டேட்/ சொத்துகளும் இல்லாமல் இறந்தவர் அல்லது கடன்களுக்குப் பொறுப்பேற்கும் உறவினர் யாரும் இல்லாதவர்.

**5.5.2.1.2.4** நோயாளி இறந்துவிட்டதாக, உயில் அல்லது எஸ்டேட் திவாலானதாக என காட்டுகிறது.

**5.6 திட்டத்திற்குத் தகுதிபெறும் வரன்முறை.** குறிப்பிட்ட பிரதேச பிற்சேர்க்கையின் பிரிவு V இல் குறிப்பிட்டுள்ளபடி, MFAக்கு விண்ணப்பிக்கும் நோயாளியானவர் நிதியுதவி தகுதிச் சோதனை அல்லது உயர் மருத்துவ செலவுகள் வரன்முறை அடிப்படையிலான நிதி உதவிகளுக்குத் தகுதிபெறலாம். பார்க்கவும் *Kaiser Permanente பிரதேசங்களுக்கான பிற்சேர்க்கை, இணைப்புகள் 1-8*.

**5.6.1 நிதியுதவி தகுதிச் சோதனை வரன்முறை.** நோயாளியானவர் நிதியுதவி தகுதிச் சோதனை வரன்முறையை பூர்த்தி செய்பவரா என்பதற்கு அவர் மதிப்பிடப்படுகிறார்.

**5.6.1.1 வருமான அளவின் அடிப்படையில் தகுதிநிலை.** உள்நாட்டு ஏழ்மை வழிகாட்டல்கள் (FPG) இன் சதவிகிதமாக KFHP/H இன் நிதியுதவி தகுதிச் சோதனை வரன்முறையைக் காட்டிலும் குறைவாக

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

அல்லது அதற்குச் சமமான நிகர குடும்ப வருமானம் கொண்ட ஒரு நோயாளியானவர் நிதி உதவிக்குத் தகுதிபெற்றவராவார். நிதியுதவி தகுதிச் சோதனையில் சொத்துகள் கருத்தில் கொள்ளப்படுவதில்லை.

**5.6.1.2 குடும்ப வருமானம்.** வருமானத் தேவைகளானவை குடும்ப உறுப்பினர்களுக்கும் பொருந்தும். ஒரு குடும்பம் என்பது ஒற்றை தனிநபர் அல்லது பிறப்பு, திருமணம் அல்லது ஒன்றாக வசிக்கும் தத்தெடுப்பு மூலம் தொடர்புகொண்டிருக்கின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழுவினர் ஆகும். குடும்ப உறுப்பினர்களில் வாழ்க்கைத் துணையர்கள், தகுதிபெற்ற வீட்டு கூட்டாளர்கள், குழந்தைகள், பராமரிப்பாளர் உறவினர்கள், பராமரிப்பாளர் உறவினர்களின் குழந்தைகள் மற்றும் அந்த வீட்டில் வசிக்கின்ற ஒற்றை தனிநபர், வாழ்க்கைத் துணையர், வீட்டு கூட்டாளர் அல்லது பெற்றோருக்கு நிதிவகையில் பொறுப்பேற்கின்ற மற்ற தனிநபர்கள் ஆகியோர் அடங்குவர்.

**5.6.2 உயர் மருத்துவ செலவின வரன்முறை.** நோயாளியானவர் உயர் மருத்துவ செலவின தகுதிநிலை வரன்முறையை பூர்த்தி செய்பவரா என்பதற்கு அவர் மதிப்பிடப்படுகிறார்.

**5.6.2.1 உயர் மருத்துவ செலவினங்கள் அடிப்படையில் தகுதி.** விண்ணப்பிப்பதற்கு முந்தைய

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

12 மாதத்திற்கும் மேற்பட்ட காலகட்டத்தில் தகுதியுள்ள சேவைகளுக்காக மருத்துவ மற்றும் மருந்தகச் செலவுகளுக்கு தன்னுடைய சொந்தப் பணத்தில் நிகர குடும்ப வருமானம் அளவிற்கு செய்திருக்கும் செலவானது வருடாந்தர குடும்ப வருமானத்தைக் காட்டிலும் அதிகமாக அல்லது 10%க்குச் சமமாக இருந்தால் நிதி உதவிக்குத் தகுதிபெறும்.

**5.6.2.1.1 KFHP/H சொந்தப் பணத்தில் செலவு.** தகுதியுள்ள சேவைகளுடன் தொடர்புடைய முன்பணம், டெபாசிட்கள், கூட்டுக்காப்புறுதி மற்றும் பிடித்தங்கள் உட்பட KP மையங்களில் செலவிட்ட மருந்து மற்றும் மருந்தகச் செலவினங்கள்.

**5.6.2.1.2 KFHP/H-அல்லாத சொந்தப் பணத்தில் செலவு.** மருத்துவரீதியாக அவசியமான சேவைகளுடன் தொடர்புடைய KP-அல்லாத மையங்களில் வழங்கப்பட்ட மருத்துவ, மருந்தக மற்றும் பல்சிகிச்சை செலவினங்கள் மற்றும் நோயாளி ஏற்றுக்கொண்டவை (ஏதேனும் தள்ளுபடிகள் அல்லது கழிவுகள் நீங்கலாக) சேர்க்கப்பட்டுள்ளன. KP-அல்லாத மையங்களில் பெற்றுக்கொண்ட சேவைகளுக்கான மருத்துவ செலவினங்களின்

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

ஆவணமாக்கலை நோயாளி வழங்க வேண்டும்.

**5.6.2.1.2.1** கட்டணங்களை ஏற்றுக்கொள்ளும் KFHP/H-அல்லாத வழங்குனரானவர் நோயாளி தகுதிபெறக்கூடிய நிதி உதவி திட்டத்தை வழங்கும்போது, கட்டணங்களுக்கு முன்னரே நோயாளிகள் விண்ணப்பித்திருப்பதானது தகுதியுள்ள மருத்துவ செலவினமாகக் கருதப்படும்.

**5.6.2.1.3 உடல்நல பிரீமியம் திட்டங்கள்.** சொந்தச் செலவுகள் என்பது உடல்நல பராமரிப்பு காப்பீட்டுடன் சம்பந்தப்பட்டிருக்கும் செலவுகளுக்கு (எ.கா., தவணைகள் அல்லது பிரீமியம்கள்) அப்பாற்பட்ட சொந்தச் செலவுகளாகும்.

**5.7 மறுப்புகளும் முறையீடுகளும்**

**5.7.1 மறுப்புகள்.** MFA திட்டத்திற்கு விண்ணப்பித்திருக்கும் ஒரு நோயாளியானவர் தகுதிநிலை வரன்முறையை பூர்த்தி செய்யாதபோது அவருடைய MFA கோரிக்கை மறுக்கப்படுவதாக அவருக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்கப்படும்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.7.2 MFA மறுப்பிற்கு எவ்வாறு மேல்முறையீடு செய்யலாம்.** MFA மறுக்கப்பட்ட நோயாளிகள் அல்லது அனுமதிக்கப்பட்டும், தாங்கள் உயர் MFA ஒதுக்கீட்டிற்குத் தகுதியுள்ளவர்கள் என்று கருதுவோர் இந்த முடிவை எதிர்த்து முறையிடலாம். பின்வரும் நிலையில் நோயாளிகள் முறையீடு செய்ய ஊக்கப்படுத்தப்படுகிறார்கள்: (1) முன்னதாக நிதிநிலை ஆவணமாக்கலை சமர்ப்பிக்காதவர்கள் அல்லது (2) குடும்ப வருமானத்தில் மாற்றம் ஏற்பட்டிருப்பது. முறையீட்டு செயலாக்கத்தை நிறைவுசெய்வதற்கான அறிவுறுத்தல்கள் MFA மற்றும் அனுமதி கடிதங்கள் மற்றும் MFA இணையதளத்திலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நிர்ணயிக்கப்பட்ட KFHP/H அலுவலர்களால் முறையீடுகள் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. நோயாளிக்கு அவர்களுடைய முறையீடுகளின் முடிவு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்கப்படுகிறது. அனைத்து முறையீட்டு முடிவுகளும் இறுதியானவை.

**5.8 ஒதுக்கீட்டு அமைப்பு.** MFA ஒதுக்கீடுகளானவை தகுதியுள்ள கடந்தகால நிலுவை அல்லது நிலுவையிலுள்ள தொகைகள், கடன் வசூலிப்பு நிறுவனங்களிடம் தரப்பட்ட மீதத்தொகைகள் மற்றும் நிலுவையிலுள்ள கட்டணங்களுக்குப் பொருந்தும். MFA ஒதுக்கீடுகளில் KP வழங்குனரால் தீர்மானிக்கப்பட்டபடி தேவையான பின்தொடர்தல் சேவைகளுக்கான தகுதிநிலை காலகட்டமும் அடங்கியிருக்கலாம்.

**5.8.1 ஒதுக்கீட்டின் அடிப்படை.** MFA திட்டத்தால் செலுத்தப்பட்ட நோயாளியின் செலவானது நோயாளி வைத்திருக்கும் உடல்நல பராமரிப்பு காப்பீடு மற்றும் நோயாளியின் குடும்ப

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

வருமானத்தைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படுகிறது.

**5.8.1.1 உடல்நல பராமரிப்பு காப்பீடு இல்லாமல் MFA-தகுதிபெற்ற நோயாளி (காப்பீடு செய்யாதவர்).** ஒரு தகுதியுள்ள காப்பீடு செய்யாத நோயாளியானவர் அனைத்து தகுதியுள்ள நோயாளி செலவின் மீதும் தள்ளுபடி பெறுகிறார்.

**5.8.1.2 உடல்நல பராமரிப்பு காப்பீடு உள்ள MFA-தகுதிபெற்ற நோயாளி (காப்பீடு செய்தவர்).** ஒரு தகுதியுள்ள காப்பீடு செய்த நோயாளியானவர் அனைத்து தகுதியுள்ள நோயாளி செலவின் மீதும் தள்ளுபடி பெறுகிறார், அது (1) நோயாளி தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்பவர் மற்றும் (2) அவருடைய காப்பீட்டு நிறுவனத்தால் பணம் வழங்கப்படாதவர். காப்பீட்டில் அடங்காத ரசீதின் பகுதியைத் தீர்மானிப்பதற்கு நோயாளியானவர் பலன்களின் விளக்கம் (EOB) என்பது போன்ற ஆவணமாக்கலை வழங்க வேண்டும். ஒரு தகுதியுள்ள காப்பீடு செய்த நோயாளியானவர், எந்தவித மறுக்கப்பட்ட உரிமைகோரல்களுக்கும். தன்னுடைய காப்பீட்டு நிறுவனத்தின் முறையீட்டு மறுப்பின் ஆவணமாக்கலை தகுதியுள்ள காப்பீடு செய்துள்ள நோயாளிகள் வழங்க வேண்டும்.

**5.8.1.2.1 காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெற்ற பேமெண்ட்டுகள்.** ஒரு தகுதியுள்ள காப்பீடு செய்த நோயாளியானவர் காப்பீட்டு

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

நிறுவனத்திடமிருந்து பெற்ற, KFHP/H ஆல் வழங்கப்பட்ட சேவைகளுக்கான எந்த பேமெண்ட்டுகளுக்காகவும் KFHP/H இடம் கையொப்பமிட வேண்டும்.

